**நவம்பர் - 18**

**"கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களுக்குச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்." _ சங் 34 : 7.**

பூமிக்குரிய சக்திகள் விரோதமாக இருக்கும் பொழுது தானே எதிரிகளை எதிர்க்க உண்மையாகவே சக்தியற்றவனாக இருக்கும் பொழுதும், மாம்சம், இரத்தம், இவைகளிலான எதிரிகளோடுங்கூட தான் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும், அதாவது சாத்தானும் அவனுடைய அந்தகாரத்தின் தூதர்களோடும் போரிடுகிறதையும் அறிந்து கொள்ளும்பொழுது நமக்கு எதிராக இருக்கும் எல்லாவற்றையும் விட நம்பக்கத்தில் இருக்கிறவர் பெரியவர் என்பதையும் எல்லா பரமசேனையின் திரளும், தெய்வீகச்சித்தத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கின்ற என்றும், தெய்வீக ஞானத்திற்கு இணங்க அவைகள் தெய்வீக காரியங்களின் முன்னேற்றத்திற்காக உபயோகிக்கப்படலாம் என்றும், ஒரு கிறிஸ்தவன் உணர்ந்து கொள்ளுவது, அவனுடைய நம்பிக்கையை எவ்வளவு அதிகப்படுத்துகிறது.

**- Z ’97, 120 (R 2139)**

நம்முடைய கர்த்தராகிய யேசுவே கர்த்தரின் விசேஷித்த தூதன். இங்கே கர்த்தருடைய தூதன் என்று சொல்லப்பட்டிருக்கிறதும், அவரையே குறிக்கும். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் அவருடைய பரிசுத்தவான்கள். அவர்கள் யேகோவாவின் பேரில் கொண்டுள்ள பயம், பயபக்தியை குறிக்கும். தங்களுடைய மாம்சம், உலகம் இவைகளின் மூலமாக பாவத்துக்கும், வஞ்சனைக்கும், சுயநலத்துக்கும், உலகத்தனத்துக்கும் ஆசைகாட்டி இணங்கச் செய்ய நாடுகிற சாத்தானின் முக்கியமான இலக்காயிருக்கிறார்கள். அவர்களை அவர் விடுவிக்க, தன்னுடைய வல்லமை, வார்த்தை, பராமரிப்பு இவைகளின் உபயோகத்தால் எதிரியின் தாக்குதல்களை முறியடித்துக் கொண்டு, கர்த்தராகிய யேசு தாமே அவர்களை சுற்றிலும் ஒரு பாளயத்தை, ஒரு ஆயுதந்தரித்த காவலை உண்டாக்காதிருந்தாரானால், சாத்தானுடைய கபட உபாயங்களுக்கு எதிராக அவர்கள் உதவியற்றவர்களாகயிருப்பார்கள். இப்படிப்பட்ட விடுதலையின் அனுபவத்துக்குள்ளாக இருப்பதற்கு அவர்கள் அவருடைய பாதுகாப்பைப் பெற்று பயன்படுத்துவதும்,சாத்தானுடைய பயங்கரமான தாக்குதல்களுக்கு எதிராக அவரோடு இருந்து ஒத்துழைப்பதும் அவர்களுக்கு அவசியமாயிருக்கிறது. இவ்விதமாக தேவனுக்காகச் செய்கிற இந்த தூயப்போரில் ஜெயத்திற்கு மேல் ஜெயங்கொள்ளுவதில் யேசுவோடு இவர்கள் பங்கு கொள்ளுகிறார்கள். **- P ’26, 157.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**ஆதி 19:16; 32:1,2; 1ராஜா 19:5; 2ராஜா 6:17; சங் 34:7; 68:17; 63:9; 103:20,21; தானி 3:28; 6:22; மத் 4:11; 18:10; லூக் 1:19; 2:9-14; 22:43; அப் 12:7; 27:23; எபி 1:14.**

**கோபுர வாசிப்பு : Z `15, 55 (R 5633)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் என்ன விடுதலையை அனுபவித்தில் கண்டேன்? அதை அனுபவிக்க எந்த நிபந்தனைகளை நான் நிறைவேற்றினேன்? அதை எவ்வாறு அனுபவித்தேன்?**